FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

2023 ஜூலை

Vol. 03 - தொகுதி 07


மேடை நகைச்சுவையாளர் நடாஷா எதிரிசூரிய பிணையில் விடுதலை


தரிந்து உடுவரகெதர கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டமை



மலையக நாட்டிய கலைஞர் ஒருவர் மீது புலனாய்வு பிரிவினர் அழுத்தம் செலுத்தியமை

ஊடக சுதந்திரம் குறித்து ஜூலை மாதத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மற்றும் கடந்தகால சம்பவங்களின் வளர்ச்சிப்போக்குகள் மற்றும் அந்தச் சம்பவங்கள் தொடர்பான அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள், சட்டத் திருத்த முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதி கூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 18 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஜூலை 2023 அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 09 சம்பவங்கள், சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 07 சம்பவங்கள், தொழிற்முறையியம் தொடர்பான 01 சம்பவம் மற்றும் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் தொடர்பான 01 சம்பவம் என மொத்தம் 18 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் இம்மாதத்தில் அவதானிக்கப்பட்டுள்ளன.

## ஜூலை மாதத்தில் கண்காணிக்கப்பட்ட சம்பவங்கள்:

01. விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மேடை நகைச்சுவை நடிகை நடாஷா எதிரிசூரியவுக்கு உயர்நீதிமன்றம் பிணை வழங்கியமை.

02. கொழும்பு மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்யுமாறு கோரி ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு தாக்கல் செய்தமை.

03. தேசிய மற்றும் மத நல்லிணக்கத்திற்கு பாதக விளைவை ஏற்படுத்தும் கருத்துக்களை வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ராஜாங்கனை சத்தாதிஸ்ஸ தேரர் பிணையில் விடுவிக்கப்பட்டமை.

04. குருநாகல் ஊடகவியலாளர் புஷ்பகுமார ஜயரத்னவினால் எழுதப்பட்ட கட்டுரை தொடர்பாகப் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டமை.

05. இலங்கை ஊடகங்களின் சமூக இயல்புகள்பற்றிய ஆய்வு அறிக்கையை வெளியிட்டு அதுபற்றிய கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமை.

06. ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர, ஆர்ப்பாட்டம் ஒன்று தொடர்பாகச் செய்தி அறிக்கையிட்டுக்கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டமை.

07. கொழும்பில் சில பெயரிடப்பட்ட இடங்களில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு தடை விதித்து 11 செயற்பாட்டாளர்களுக்கு எதிராக நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை.

08. ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர கைது செய்யப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை.

09. கறுப்பு ஜுலையின் 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.

10. 1983 கறுப்பு ஜுலையில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்விற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் சில ஒழுங்கமைக்கப்பட்ட தரப்பினர் மற்றும் காவல்துறையினர் குறுக்கிட்டமை.

11. இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரின் அழுத்தத்தினால் தோட்ட நாடகம் இரத்து செய்யப்பட்டமை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டமை.

12. கவிதை எழுதியதற்காக நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னாப் ஜசீம், பாதுகாப்பு அமைச்சினால் தொடர்ந்து பயங்கரவாதியாகப் பெயரிடப்பட்டுள்ளமை.

13. நியாயமற்ற முறையில் பணிநீக்கம் செய்யப்பட்ட ஊடகவியலாளர் கலாவர்ஷினி கனகரத்தினத்திற்கு நட்டஈடு வழங்கச் சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனம் இணக்கம் தெரிவித்தமை.

14. 9 மே 2022 வன்முறையைத் தடுக்கத் தவறியதற்காகக் காவல்துறை மற்றும் அரசாங்கத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனு நிராகரிக்கப்பட்டமை.

15. அநுராதபுர ஊடகவியலாளர் தம்சீர் ஹமீட் தனக்கு கொலை அச்சுறுத்தல் காணப்படுவதாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளமை.

16. குளியாபிட்டிய பிரதேச ஊடகவியலாளர் தினேஷ் உபேந்திரா அவரது அலுவலகத்தில் வைத்துத் தாக்கப்பட்டமை.

17. பொரளையில் தொழிலாளர் போராட்ட மத்திய நிலையத்தினால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸாரின் தாக்குதல் காரணமாகப் பெண் செயற்பாட்டாளர் ஒருவர் காயமடைந்துள்ளமை.

18. தேசிய கீதத்தைத் திரிபுபடுத்தி பாடியதற்காகப் பாடகி உமாரா சிங்கவன்சவுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2023 ஜுலை மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்க கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 09 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 07 |
| தொழிற்முறையியம் | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 01 |
| **மொத்தம்** | **18** |

## பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல் மற்றும் மனதை ஒர்முகப்படுத்தி சுயாதீனமாகத் தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழலை உருவாக்குதல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளிலிருந்து எதிர்விளைவுகளுக்கு உள்ளாகாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட பல சம்பவங்கள் ஜுலை மாதத்தில் அவதானிக்கப்பட்டன. இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 09 சம்பவங்கள் ஜுலை மாதத்தில் அவதானிக்கப்பட்டன. சில சம்பவங்கள் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் தொடர்பானவை என்பதனால் அந்தத் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**அட்டவணை 2 : 2023 ஜூலை மாதம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 09**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்க கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| தாக்குதல் | 02 |
| இடையூறு விளைவித்தல் / சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் | 02 |
| உளவியல் ரீதியான பாதிப்புக்கள் | 05 |
| **மொத்தம்** | **09** |

**01. குருநாகல் ஊடகவியலாளர் புஷ்பகுமார ஜயரத்னவினால் எழுதப்பட்ட கட்டுரை தொடர்பாகப் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டமை.**

சட்ட விரோதமான முறையில் ஒன்றிணைக்கப்பட்ட வாகனம் ஒன்று தொடர்பில் சந்தேகத்தின் பேரில் வாரியபொல பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாக வெளியான செய்தி தொடர்பில் வாகனத்தின் உரிமையாளரான வர்த்தகர் ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர் தனது ஊடக அறிக்கை தெளிவான ஆதாரங்களுடன் மேற்கொண்டதாகவும், சந்தேக நபரின் முறைப்பாட்டின் படி, அத்தகைய விசாரணையை நடத்துவது ஒரு தேவையற்ற செல்வாக்கு செலுத்தும் செயற்பாடாகும் எனக் குறித்த ஊடகவியலாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஆதாரம்: youtube.com

**02. கறுப்பு ஜூலையின் 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.**

1983 கறுப்பு ஜூலையின் 40வது ஆண்டு நினைவுத் தினத்தை முன்னிட்டு சோசலிச இலைஞர் சங்கம் ஜூலை 23 ஆம் திகதி அன்று கொழும்பு, நகர மண்டபத்திற்கு அருகில் நடத்திய பேரணியை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டனர். இந்த அணிவகுப்பு கொழும்பு ஹைட் மைதானத்திலிருந்து விகாரமஹா தேவி பூங்காவரை செல்லத் திட்டமிடப்பட்டிருந்தது. 6 மணித்தியாலத்திற்கு முன்னர் முன்னறிவிப்பு வழங்காததால், பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 78(2)ன் கீழ் ஆர்ப்பாட்டம் கலைக்கப்பட்டதாகக் காவல்துறை அறிவித்துள்ளது.

ஆதாரம்: www.bbc.com

**03. 1983 கறுப்பு ஜூலையில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்விற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் சில ஒழுங்கமைக்கப்பட்ட தரப்பினர் மற்றும் காவல்துறையினர் குறுக்கிட்டமை.**

“வடக்கு-தெற்கு சகோதரத்துவம்“ என்ற பெயரில் ஒழுங்கமைக்கப்பட்ட சிவில் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் குழு ஒன்று ஜூலை 23 அன்று பொரளை மயானத்திற்கு முன்பாக நினைவேந்தல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. அதனை இடையூறு விளைவிக்கும் முகமாக வருகைதந்த ஒரு குழுவைத் தடுப்பதற்கு பதிலாக நினைவேந்தல் நிகழ்விற்கு வருகைத்தந்திருந்த நபர்களைக் கலைக்க காவல்துறையினர் பிரியத்தனம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்: www.youtube.com

**04. இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரின் அழுத்தத்தினால் தோட்ட நாடகம் இரத்து செய்யப்பட்டமை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டமை.**

ஜூலை மாதம் 09 ஆம் திகதி மாலை பொகவந்தலாவை, கொடியாகல தோட்டத்தில் அரங்கேற்ற இருந்த "லயத்து கோழிகள்" நாடகத்தை இராணுவம், பொலிஸ் STF படை மற்றும் தோட்ட நிர்வாகத்துடன் இணைந்து தடுத்தமை தொடர்பில் குறித்த நாடகத்தின் இயக்குனர் இராசையா லோகானந்தன் ஜூலை 26 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடொன்றை மேற்கொண்டார். பெருந்தோட்டம் தொடர்பான கலாசார நடவடிக்கைகள் பாதுகாப்பு படையினரின் கடும் கண்காணிப்பில் இருப்பதாக அவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தார்.

ஆதாரம்: theleader.lk

**05. கவிதை எழுதியதற்காக நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னாப் ஜஸீம், பாதுகாப்பு அமைச்சினால் தொடர்ந்து பயங்கரவாதியாகப் பெயரிடப்பட்டுள்ளமை.**

ஜூன் 8, 2023 அன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்னவினால் வெளியிடப்பட்ட 2335/16 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் 301 நபர்கள் மற்றும் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய 15 அமைப்புகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அஹ்னாப் ஜஸீமின் பெயரும் அதில் இடம்பெற்றுள்ளது.

அஹ்னாஃப் கைது செய்யப்பட்டமை மனித உரிமை மீறல் என UNWGAD அறிவித்துள்ளதாகவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் இந்த நடவடிக்கையால் அஹ்னாஃப் ஜஸீமுக்கு வேலை கூடக் கிடைக்காத நிலையில் விவசாயம் செய்து வருவதாகவும் அஹ்னாப்பின் சட்டத்தரணி சஞ்சய் வில்சன் ஜயசேகர டுவிட்டர் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மே 16, 2020 அன்று கைது செய்யப்பட்டதுடன் 579 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பின்னர் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆதாரம்: theleader.lk

**06. அநுராதபுர ஊடகவியலாளர் தம்சீர் ஹமீட் தனக்கு கொலை அச்சுறுத்தல் காணப்படுவதாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளமை.**

அனுராதபுரம் பொசன் பண்டிகையின்போது வர்த்தக நிலையங்களைக் குத்தகைக்கு வழங்கியதில் இடம்பெற்ற முறைகேடுகள்குறித்த செய்தியை வெளியிட வேண்டாமென ஒரு குழுவினர் தன்னை அச்சுறுத்தியதாகவும், அச்சுறுத்தலையும்

பொருட்படுத்தாமல் செய்தி வெளியிட்டதால், அவர்களில் ஒருவர் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அருகில் ஜூலை 21 அன்று தம்மை கத்தியால் குத்த முயன்றதாகவும் ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார். குறித்த ஊடகவியலாளர் அந்தத் தாக்குதலிலிருந்து தப்பிய போதிலும், அந்த நபர் கொலை மிரட்டல் விடுத்துள்ளார். குறித்த சந்தேக நபர் தொடர்பில் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. வடமத்திய மாகாணத்தின் பொறுப்பாளர் பிரதி பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கமைய சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆதாரம்: si.rata.lk

07. **குளியாபிட்டிய பிரதேச ஊடகவியலாளர் தினேஷ் உபேந்திரா அவரது அலுவலகத்தில் வைத்துத் தாக்கப்பட்டமை.**

குளியாபிட்டியவில் உள்ள வர்த்தக நிலையமொன்றின் மேல் தளத்தில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தின் கதவுகளை உடைத்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரும் வேளையில், அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து வீடியோ பதிவு செய்த நபரிடம் விசாரணை நடத்தும் போதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாகக் குறித்த ஊடகவியலாளர் குளியாபிட்டிய போதனா வைத்தியசாலையில் வசிப்பிட சிகிச்சை பெற்று வந்தார். குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், குளியாப்பிட்டிய நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆதாரம்: lankadeepa.lk

08. **பொரளையில் தொழிலாளர் போராட்ட மத்திய நிலையத்தினால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸாரின் தாக்குதல் காரணமாகப் பெண் செயற்பாட்டாளர் ஒருவர் காயமடைந்துள்ளமை.**

ஜூலை 28 ஆம் திகதி அன்று, பொரளையில் நடைபெற்ற போராட்டத்தைக் கலைப்பதற்காகப் பொலிசார் தாக்குதல் நடத்தினர், மேலும் ரஷ்மி திவ்யாஜலி என்ற ஆர்வலரின் தலையில் காயம் ஏற்பட்டதன் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். போலீசார் கல் வீசித் தாக்கியதில் அவர் காயமடைந்ததாகப் போராட்டக்காரர்கள் குற்றம் சாட்டினர். உத்தேச தொழிலாளர் சட்டங்களுக்கு எதிராகவும் தொழிலாளர் நிதி கொள்ளையடிப்பதற்கும் எதிராகக் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்திற்கு அருகில் நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டத்தைத் தடுக்க பொலிஸாரும் பாதுகாப்பு படையினரும் குவிக்கப்பட்டதன் காரணமாகப் பொரளை சஹஸ்புர வீட்டுத் தொகுதிக்கு அருகில் இடம்பெற்ற போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆதாரம்: english.theleader.lk

09. **தேசிய கீதத்தைத் திரிபுபடுத்தி பாடியதற்காகப் பாடகி உமாரா சிங்கவன்சவுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை.**

ஜூலை 30 ஆம் திகதி நடைபெற்ற சிலோன் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் ஆரம்ப நிகழ்வின்போது தேசிய கீதத்தைத் திரிபுபடுத்தியதாகப் பல்வேறு தரப்பினரால் அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டதுடன், குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பல முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. அத்துடன், பிரதமரின் உத்தரவின் பேரில் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்த குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. தேசிய கீதத்தைத் தாம் திரிபுபடுத்தவில்லையென உமாரா சின்ஹவன்ச முகநூல் பதிவில் தெரிவித்துள்ளார்.

ஆதாரம்: www.wsws.org, www.lankadeepa.lk

## சட்ட வரையறை அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள்

**பத்திரிகை சுதந்திரம் தொடர்பான சட்ட வரையறை அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகளின் கீழ் ஜூலை மாதத்தில் 07 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் முந்தைய நிகழ்வுகளின் முன்னேற்றங்கள் இதில் அடங்கும். ஐசிசிபிஆர் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த மேடை நகைச்சுவை நடிகர் நடாஷா எதிரிசூரியவிற்கு பிணை வழங்கிய உயர்நீதிமன்றத்தின் உத்தரவு, அந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தியது குறித்து பரவலாக விவாதிக்கப்பட்ட ஒரு முக்கியமான தீர்ப்பாகக் கருதலாம். அத்துடன் ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவை கைதுசெய்து தாக்கியமை மற்றும் அவருக்கு எதிரான சாட்சியங்களை நீதிமன்றில் முன்வைக்காத பொலிசார், குறித்த சம்பவத்தில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் நீதிமன்றமும் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சாதகமாகத் தலையிட்டமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது.**

**அட்டவணை 03: 2023 ஜூலை : சட்ட வரையறை அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் – 07 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 07 |
| **மொத்தம்** | **07** |

**01. விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மேடை நகைச்சுவை நடிகை நடாஷா எதிரிசூரியவுக்கு உயர்நீதிமன்றம் பிணை வழங்கியமை.**

மேடை நகைச்சுவை காட்சிமூலம் பௌத்த மதத்தை அவமதித்த குற்றத்திற்காக ICCPR சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நடாஷா எதிரிசூரியவின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிணை கோரிக்கையை ஜூலை 5ஆம் திகதி உயர் நீதிமன்றம் பரிசீலித்து, அவரைப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டது.

குறித்த அறிக்கையை மத அல்லது மத வெறுப்புணர்வைத் தூண்டும் அறிக்கையாகக் கொள்ள முடியாது எனச் சுட்டிக்காட்டிய நீதிபதி, ICCPR சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நோக்கங்களுக்குப் புறம்பாகத் தற்போது நடைமுறைப்படுத்தப்படுவதாகக் குறிப்பிட்டார்.

ஆதாரம்: sinhala.newsfirst.lk

**02. கொழும்பு மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்யுமாறு கோரி ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு தாக்கல் செய்தமை.**

குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு வழங்கிய உத்தரவை ரத்து செய்யுமாறு கோரி கொழும்பு கோட்டை நீதவான் தாக்கல் செய்த மறுசீராய்வு மனுவை நிராகரித்து, உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட உத்தரவைச் செல்லுபடியற்றதாகக் கோரி இந்த மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேடை நகைச்சுவையாளர் நடாஷா எதிரிசூரிய கைது செய்யப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன உள்ளிட்டோர் ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்து தெரிவித்தமைக்காக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு உத்தரவிட்ட கொழும்பு கோட்டை நீதவான், உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட மறுசீராய்வு மனுவை முன்னறிவிப்பின்றி நிராகரிக்குமாறு கடந்த ஜூலை 6ஆம் திகதி உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆதாரம்: thetime.lk

**03. 9 மே 2022 வன்முறையைத் தடுக்கத் தவறியதற்காகக் காவல்துறை மற்றும் அரசாங்கத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனு நிராகரிக்கப்பட்டமை.**

2022 மே 9 ஆம் திகதி காலிமுகத்திடலில் உள்ள ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அருகாமையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் ரயிட்ஸ் டு லயிப் அமைப்பின் சார்பில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் பிலிப் திசாநாயக்க, பிரதி பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் உள்ளிட்ட பொறுப்புவாய்ந்த காவல்துறை அதிகாரிகள், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சட்டமா அதிபருக்கு எதிராக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இலக்கம் SC/FRA/15/23 என்ற வழக்கு சட்டப்பூர்வ காலக்கெடுவிற்குப் பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சட்டமா அதிபர் முன்வைத்த பூர்வாங்க ஆட்சேபனையை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, குறித்த வழக்கை விசாரிக்காமல் நிராகரித்தது.

ஆதாரம்: www.aithiya.lk

**04. தேசிய மற்றும் மத நல்லிணக்கத்திற்கு பாதக விளைவை ஏற்படுத்தும் கருத்துக்களை வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ராஜாங்கனை சத்தாதிஸ்ஸ தேரர் பிணையில் விடுவிக்கப்பட்டமை.**

மேற்படி குற்றச்சாட்டின் பேரில், சத்தாதிஸ்ஸ தேரர் கடந்த மே மாதம் 28ஆம் திகதி கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், ஜூலை 5ஆம் திகதி வரையிலும், மீண்டும் ஜூலை 12ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். குறித்த வழக்கு ஜூலை 12ஆம் திகதி மீளப்பெற்றபோது, சந்தேகநபரை தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு கோட்டை நீதவான் உத்தரவிட்டார். ICCPR சட்டம், கணினி குற்றச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டத்தின் கீழ் பிக்குவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, மேலும் பிணை வழங்கும்போது, ICCPR சட்டத்தின் கீழ் தொடர்புடைய குற்றச்சாட்டுகளின் கீழ் இந்தச் சம்பவத்தை உள்ளடக்க முடியாது என மாஜிஸ்திரேட் குறிபிட்டார்.

ஆதாரம்: divaina.lk

**05. ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர, ஆர்ப்பாட்டம் ஒன்று தொடர்பாகச் செய்தி அறிக்கையிட்டுக்கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டமை.**

கடந்த ஜூலை 28ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில்அறிக்கையிட்டுக்கொண்டிருந்த ஊடகவியலாளர் கைதுசெய்யப்பட்டார் மேலும் அவர் அங்கு வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்ட காணொளி ஊடகங்கள்மூலம் ஒளிபரப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் அவரைப் பொலிஸ் ஜீப் வண்டியில் பொரள்ள காவல்நிலையத்திற்கு கொண்டு செல்லும்போது தனக்கு தாக்குதல் நடத்தியதாக ஊடகவியலாளர் நீதிமன்றத்தின் முன்னிலையில் தெரிவித்துள்ளார். ஜூலை 29 ஆம் திகதி அன்று, அவர் தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார், அவரைப் பரிசோதித்த கொழும்பு பிரதான நீதவான், அவருக்குப் பிணை வழங்கினார். இந்தக் கைது நடவடிக்கைக்கு ஊடக அமைப்புகள் உட்பட பல தரப்பினரின் கடும் கண்டனத்திற்கு உள்ளானது. இந்த வழக்கு ஆகஸ்ட் 31ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஆதாரம்: www.bbc.com

**06. கொழும்பில் சில பெயரிடப்பட்ட இடங்களில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு தடை விதித்து 11 செயற்பாட்டாளர்களுக்கு எதிராக நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை.**

ஜூலை 28 ஆம் திகதி லிப்டன் சுற்றுவட்டத்திற்கு அருகில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டம் தொடர்பில் மருதானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க, தொழிலாளர் போராட்ட அமைப்பின் செயலாளர் துமிந்த நாகமுவ உள்ளிட்ட குழுவினருக்கு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஆதாரம்: www.bbc.com/sinhala

**07. ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர கைது செய்யப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை.**

ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் அனைத்து தரப்பினரிடமிருந்தும் தகவல் கோரப்பட்டுள்ளதாகவும், உரிய அதிகாரிகள் விசாரணைக்கு அழைக்கப்படுவார்கள் எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. ஜூலை 28 ஆம் திகதி அன்று, அவர் பொலிஸ் காவலில் இருந்தபோது, ஆணைக்குழுவின் உடனடி பதில் குழு அதிகாரிகள் அங்குச் சென்று தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளரை நீதிமன்ற மருத்துவ அதிகாரியிடம் பரிசோதிக்குமாறு அறிவுருத்தியபோதிலும் போலீசார் மறுநாள் காலை வரை அறிவுறுத்தல்களை செயல்படுத்தவில்லை.

ஆதாரம்: www.hrcsl.lk

## தொழிற்முறையியம்

**'தொழிற்முறையியம்' என்பது ஊடக சுதந்திரம் தொடர்பாகக் கவனிக்கப்படும் ஒரு முக்கிய காரணியாகும். சிறந்த கல்வியை பெற்ற பத்திரிகையாளர்கள், பத்திரிகையாளர்களின் பணி நிலைமைகள், பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர் குழு சர்வதேச வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துதல், சுய-தணிக்கை, தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் பத்திரிகையாளர்களின் நிபுணத்துவ சுயாட்சி உறுதிப்படுத்தப்படல் மற்றும் பத்திரிகையாளரின் பங்குபற்றிய புரிதல், ஊடக தொழிலுக்கான அங்கீகாரம் போன்ற குறிகாட்டிகள் தொழிற்முறையியம் என்ற ஆக்கக் கூறை பிரதிநிதிப்படுத்துகின்றது. இந்தக் குறிகாட்டியின் கீழ் ஒரு சம்பவம் ஜூலை மாதத்தில் பதிவாகியுள்ளது.**

**அட்டவணை 04-2023 ஜூலை: தொழிற்முறையியம் -01 சம்பவம்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஊடகவியலாளர்களின் சேவைக்கான நிபந்தனைகள் | 01 |
| **மொத்தம்** | **01** |

01. **நியாயமற்ற முறையில் பணிநீக்கம் செய்யப்பட்ட ஊடகவியலாளர் கலாவர்ஷினி கனகரத்தினத்திற்கு நட்டஈடு வழங்கச் சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனம் இணக்கம் தெரிவித்தமை.**

2019 ஆம் ஆண்டு தான் அசாதாரணமான முறையில் சேவையிலிருந்து அகற்றியமை தொடர்பில் Athavan Media வின் செய்தி மேலாளராகப் பணியாற்றிய ஊடகவியலாளர் கலாவர்ஷினி கனகரத்தினம் அவர்களால் Lyca Mobile நிறுவனத்திற்கு எதிராகக் கொழும்பு தொழிலாளர் நீதிமன்றத்தில் முறைப்பாடு மேற்கொண்டிருந்ததுடன் ஒரு மில்லியன் ரூபாய் இழப்பீடாகப் பெற்றுக்கொடுத்து இந்த வழக்கை முடிவுக்குக் கொண்டுவர குறித்த நிறுவனம் உடன்பாட்டுக்கு வந்துள்ளது. அதன்படி, ஜூலை 18ம் திகதி உரிய இழப்பீடு வழங்கப்பட்டது.

ஆதாரம்: si.rata.lk

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள்" ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. "கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு" என்ற குறிகாட்டியின் கீழ் ஒரு சம்பவங்கள் இதில் அடங்கும்.**

**அட்டவணை 05-2023 ஜூலை கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் - 01 சம்பவம்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 01 |
| **மொத்தம்** | **01** |

01. **இலங்கை ஊடகங்களின் சமூக இயல்புகள்பற்றிய ஆய்வு அறிக்கையை வெளியிட்டு அதுபற்றிய கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமை.**

IREX மற்றும் Hashtag Generation உடன் இணைந்து Behind the scenes: A look into the gendered dimensions of Sri Lankan media (திரைக்குப் பின்னால்: இலங்கை ஊடகங்களின்

பாலின பரிமாணங்கள்பற்றிய ஒரு பார்வை) என்ற இந்த ஆய்வு இலங்கையில் காணப்படும் 12 ஊடக நிறுவனங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். ஜூலை 26 அன்று நடைபெற்ற இந்த அறிக்கையின் வெளியீட்டு விழாவிலும் அதுபற்றிய ஆன்லைன் விவாதத்தில் ஐசுநுஓ இன் பாலினம் மற்றும் பிற சமூகப் பிரச்சினைகள்குறித்த ஆலோசகராகச் செயற்படும் தாரிணி பிரிசில்லா, ஹறிணி பெர்னாண்டோ, மற்றும் எக்ஸ்பிரஸ் செய்தித்தாள்களின் டிஜிட்டல் மீடியாவின் தலைவர் ரமேஷ் குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

ஆதாரம்: MFRM Desk

**அட்டவணை 6: ஊடக சுதந்திரம்: 2023 ஜனவரி முதல் ஜூலை வரையான காலப்பகுதிக்குள் சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2023 ஜனவரி– ஜூன் | | 2023 ஜூலை |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 18 | - | 09 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 45 | 13 | 07 |
| ஊடக சுயாதீனத்துவம் | - | - | - |
| தொழிற்முறையியம் | 04 | - | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 21 | - | 01 |
| **மொத்தம்** | **88** | **13** | **18** |

[2023 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை]

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


**Free Media Movement**

Convener: Hana Ibrahim +94 77 741 2995 | Secretary: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620
Treasurer: Thaha Muzammil +94 77 3741026 | Assistant Secretary: Priyadarshani Sivaraja +94 772530258
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com|Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka|#FMM25


Layout: Nalinda Seneviratne